DEPOSITION OF WITNESS

IN THE COURT OF FAST TRACK JUDICIAL MAGISTRATE, MAYILADUTHURAI.

**STC NO: 100/2024**

Cross Examination of PW-4 Date : 07.04.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இளங்கோவன் | Calling | : | |
| Husband's Name | : | முருகேசன் | Age | : | 69/2026 |
| Village | : | சுபாஷ் தெரு | | | |
| Taluk | : | மயிலாடுதுறை | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.04.2026

**(Accused absent, u/s. 355 of BNSS petition filed and allowed)**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் சேகர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் சேகர் என்னுடைய நீண்டகால நண்பர் என்றால் சரிதான். 40 ஆண்டு கால நண்பர் ஆவார். இந்த வழக்கு பற்றி விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். வழக்கு விபரங்கள் அனைத்தும் சேகர் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் அடிக்கடி புகார்தாரர் சேகர் வீட்டிற்கு செல்வதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என்ன காரணத்துக்காக சேகர் வீட்டிற்கு செல்வேன் என்றால் அவர் எனது குடும்ப நண்பர் அதன் அடிப்படையில் நான் அவர் வீட்டில் அடிக்கடி செல்வேன். நான் எனது முதல் விசாரணையில் நானும் சேகரும் சேகர் வீட்டில் இருந்த பொழுது எதிரி சௌமியன் அங்கு வந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் நானும் சேகரும் இருந்தோம் அப்பொழுது சௌமியன் அங்கு வந்தார். எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தேன் என்றால் சுமார் 15 நிமிடம் சேகருடன் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது சௌமியன் அங்கு வந்தார். சௌமியன் வந்த பிறகு எவ்வளவு நேரம் சேகர் வீட்டில் இருந்தேன் என்றால் 3/4 மணி நேரம் அங்கு இருந்தேன். எனது வயோதிகத்தின் காரணமாக முன்விசாரணையில் நடைபெற்றதாக சொல்லும் சம்பவத்தின் தேதியை என்னால் குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்ததற்குப் பின்னர் பு.சா.ஆ.7 புரோநோட் தேதியை தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் புகார்தாரரின் வீட்டிற்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளேன். அன்றைய தினம் நானாக சென்றேனா அல்லது புகார்தார் அழைப்பின் பேரில் சென்றேனா என்றால் எனது குடும்ப விஷயம் தொடர்பாக

7/4/26

ஆலோசனை செய்ய நானாகத்தான் புகார்தாரர் சேகர் வீட்டிற்கு சென்றேன். அவ்வாறு சென்ற சமயத்தில் புகார்தாரர், சௌமியன் வருவதற்கு முன்னால் சௌமியனுக்கு பணம் கொடுக்கப் போவதாக என்னிடம் தெரிவித்தாரா என்றால் இல்லை. பு.சா.ஆ.7 ஆவணம் பற்றிய விபரம் நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளித்த தினத்தன்று தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ஆவணம் எழுதப்பட்ட தினத்தன்று எனக்கு தெரியும். பு.சா.ஆ.7 ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்ட மற்றொரு நபரான ராஜமூர்த்தி என்பவரும் புகார்தாரர் சேகரின் நண்பர் என்றால் சரிதான். எதிரி சௌமியன் தரப்பில் சாட்சிகள் யாரும் பு.சா.ஆ.7 ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். மற்றொரு சாட்சியான ராஜமூர்த்திதான் இவ்வழக்கில் புகார்தாரர் சேகரின் பவர் ஏஜென்ட் என்றால் சரிதான். நானும் ராஜமூர்த்தியும் சேகருக்கு நெருங்கிய நண்பர்கள் என்பதால் இருவருமே அக்கறை சாட்சிகள் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் சௌமியன் பணம் பெற்றார். அதற்காக நான் சாட்சி கையொப்பமிட்டேன். பு.சா.ஆ.7 ஆவணம் யார் தயார் செய்தது, எப்போது தயார் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணையில் சேகர், சௌமியனுக்கு ரூ.16,00,000/- கடன் கொடுத்ததாகவும், அதனை என் முன்னிலையில் எண்ணிப் பார்த்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், அவ்வாறு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. சேகர் அடிக்கடி யாருக்கேனும் பணம் கடன் கொடுக்கும் பழக்கம் உடையவரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இதுபோன்ற சேகருக்காக வேறு ஏதேனும் ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி புகார்தாரிடம் ரூ.16,00,000/- கடன் பெறவில்லை என்றாலும், நான் புகார்தாரர் சேகரின் நண்பர் என்பதால் புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பு.சா.ஆ.7 ஆவணத்தில்தான் நான் சாட்சிய கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். பு.சா.ஆ.7 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

7/4/26

விரைவு குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.